**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு**
**சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் அருளியது**

# கருவூரார் கீதை



**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)

ஓம் குருவே போற்றி! ஓம் குரு குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,120 **வைகாசி** மாதம்.

## இந்து இலக்கியக் கழகம்

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

1. **“பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் எழுதிய முதல் கீதை”** - 12/03/1985இல் குருதேவர் அவர்களால் வெளியிடப்பட்டது.
2. **“கருவாக்கு, குருவாக்கு, தருவாக்கு, திருவாக்கு, அருள்வாக்கு, மருள்வாக்கு, கருவாசகம் ... முதலியனவற்றின் குருபாரம்பரிய வாசகம்.”** - 01/01/1985இல் குருதேவர் அவர்களால் அருளப்பட்ட கட்டுரை.
3. **“மந்திரவாதிகளை வெல்ல வழி கூறும் அஞ்சல்”** - 05/04/1984இல் குருதேவர் கூறி மதுரைச் சித்தரடியான் திரு வேம்படியான் மணி அவர்களுக்கு எழுதப்பட்ட அஞ்சல்.
4. **“வ.ஆ. மாவட்டச் சுற்றுப்பயண ஆய்வு மடல்”** - 22/03/1985இல் குருதேவர் அவர்கள் எழுதிய அஞ்சல் வடிவக் கட்டுரை.
5. **“தமிழின ஒற்றுமைச் செயல்சித்தாந்தம்”** - 27/03/1985இல் குருதேவர் அவர்கள் தமது மதுரைச் சித்தரடியான் திரு ம.சி.இராமன் அவர்களுக்கு எழுதிய அஞ்சல் வடிவக் கட்டுரை.
6. **“ஐய விளக்க மடல்”** - 21/12/84இல் குருதேவர் அவர்கள் காரைக்குடிச் சித்தரடியான் திரு இராமானுசதாசு அவர்களின் ஐயங்களுக்கு விளக்கம் தருவதற்காக எழுதிய நெடிய அஞ்சல் வடிவக் கட்டுரை.

சென்னை-11,
12-3-1985.

**பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் எழுதிய**

# முதல் கீதை

**[முதலாம் விசயாலயனுக்காக எழுதப் பட்டது]**

## "சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூரின் கீதை" [உரைநடை]

**கருவூரூர் வழிவந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ.இராமசாமிப் பிள்ளை அவர்கள் உரைநடைப் படுத்தியது.**

## பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் கீதைகளுக்கு முன்னுரை

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூரின் கீதை.

இதை வெளியிடுகின்ற பொறுப்பைப் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி என்ற முறையிலும்; இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் மூன்றாவது தலைவர் என்ற கடமையிலுமே நிறைவேற்றுகிறோம் யாம்.

கி.பி.785இல் தமிழர்கள் இனப்பற்றோ! மொழிப்பற்றோ! நாட்டுப்பற்றோ! இன ஒற்றுமையுணர்வோ! ... இல்லாமல் அன்னியர்களிடம் அடிமைப்பட்டுக் கிடந்த போது; இவர்களை ஒன்றுதிரட்டி ஒற்றுமைப்படுத்தும் மாபெரும் பணிக்காக எழுதப்பட்ட முதல் கீதையே இது. இதுபோல் இன்னும் எட்டுக் (8) கீதைகள் இருக்கின்றன. முதலாம் இராசராச சோழனுக்கும், இவனது அண்ணன் ஆதித்த கரிகாலனுக்கும் கூறிய கீதைகள் தமிழின எழுச்சிப் போர் வரலாற்றின் நுட்பங்களை மிகச் சிறப்பாக விளக்குகின்றன.

இந்து மறுமலர்ச்சி இயக்க வளர்ச்சிக்காக இந்த ஒன்பது கீதைகளின் உயிர்நாடியான கருத்துக்களையும், சொற்களையும், வாசகங்களையும் அப்படியே பயன்படுத்தித்தான் உரைநடையில் ஒன்பது கீதைகளையும் எழுதியுள்ளார் கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார். இவர், பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் நூல்களை முழுமையாகப் படித்தவர்; இன்றுள்ள எழுத்து வடிவில், தாள்களில், எளிய, இனிய தமிழ் உரைநடைப் போக்கில் எழுதித் தந்தவர். இவர் கி.பி.1925 வரை வாழ்ந்து எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியுற்றதால் பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் நூல்களுக்குப் பல வடிவங்கள் தயாரித்து இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் பாதுகாக்கப்படும் ஏற்பாடுகளைச் செய்திட்டார்.

இவருடைய வாழ்வும், வரலாறும், வாழ்வியல் சாதனைகளும் வியக்கத் தக்க அளவில் மிகமிகப் பெரியவை, அரியவை, பயன்மிக்கவை.

இவர், தாம் கீதையை உரைநடைப் படுத்தியதால்தான் ஒன்பது கீதைகளின் உயிரோட்டத்தையும் சமப்படுத்த முடிந்தது என்கிறார். இவரே பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் **கீதையின் அழகிய வடிவத்தைக்** 'கருவாசகம்', 'குருவாசகம்', 'தருவாசகம்', 'திருவாசகம்', 'அருள்வாசகம்', 'மருள்வாசகம்' எனும் ஆறிலும் முழுமையாகக்

காணலாமென்றும்; **<u>கீதையின் கருத்தாழத்தை</u>** கருவாக்கியம், குருவாக்கியம், தருவாக்கியம், திருவாக்கியம், அருள்வாக்கியம், மருள்வாக்கியம் எனும் ஆறிலும் முழுமையாகக் காணலாமென்றும்; **<u>கீதையின் அடிப்படைப் போக்கையும், முடிவான நோக்கையும், செயல்திட்ட நுட்ப திட்ப ஒட்ப வளத்தையும் ...</u>** கருவாக்கு, குருவாக்கு, தருவாக்கு, திருவாக்கு, அருள்வாக்கு, மருள்வாக்கு எனும் ஆறிலும் முழுமையாகக் காணலாமென்றும் குறிக்கிறார். எனவே, இவருடைய கீதையின் உரைநடை வடிவம் பலராலும் படிக்கப் பட்டும்; படிப்பறிவில்லாதவர்களுக்குப் படித்துக் காட்ட மட்டுமே செயலாக்கப்பட வேண்டுமென்பது புரிகிறது.

ஆனால், 'இவர், கடுமையாக அன்னியர்களை, அன்னிய மொழிகளை மறுப்பதும், வெறுப்பதும், எதிர்ப்பதும் இன்றைக்குத் தேவைதானா?...' என்ற ஐய வினா எமது இளமைப் பருவத்திலேயே எமக்கு ஏற்பட்டு விட்டது. இருந்த போதிலும் எமது தந்தை அடிக்கடி <u>"நீ புகழுக்கு ஆசைப்பட்டோ! அல்லது அச்ச கூச்ச உணர்வாலோ!... நமது முன்னோர்களின் கருத்துக்களையோ! வாசகங்களில் உள்ள சொற்களையோ! திருத்தவோ! மாற்றவோ! மறைக்கவோ! குறைக்கவோ! ... முற்படவே கூடாது. அது மாபெரும் தவறு. நமது முன்னோர்களின் படைப்புக்கள் அவர்களுடைய காலச் சூழ்நிலைகளுக்கும், தேவைகளுக்கும் ஏற்பப் பிறப்பிக்கப் பட்டவை. எனவே, அவற்றை வரலாற்றுச் சின்னங்களாக அப்படியே இன்றைய உலகிடம் ஒப்படைப்பதுதான் உனது கடமை..."</u> என்று கூறிட்ட அறிவுரைப்படியே இந்த முதல் கீதையை வெளியிடுகின்றேன்.

"... இந்த முதல் கீதை, முதலாம் விசயாலயனுக்காக எழுதப்பட்டது. இக் கீதை அவனாலும், அவனுடைய நண்பர்களாலும், தோழர்களாலும், பட்டாளத்தாலும், படையாலும் ... மாதத்திற்குப் பலமுறை படிக்கப்பட்டதால்தான்; உறையூரிலும், உத்திரமேரூரிலும், கரூரிலும்,

கோவிலூரிலும் (அரியலூர்க் கோவிலூர்), திருக்காட்டுப் பள்ளியிலும், குலக்குடியிலும் (முசிறி வட்டம்), முடிகண்ட சோழபுரத்திலும், கொல்லி மலையிலும், பொதிகை மலையிலும், ... அருளாட்சி மலர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் பாசறைகள், பாடிவீடுகள், நாற்றங்கால்கள், கருவறைகள், குருகுலங்கள், ... அமைந்திட்டன....” என்று கருவூரார் வழிவந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். எனவே, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாக, இராசிவட்ட நிறைவுடையாராக, ஆத்தாள் அமளிகையாக, கொற்றவை இருக்கையாக, பராசத்தித் திருவடியாக, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானமாக, அரசயோகியாக, இந்துமதத் தந்தையாக, ஞாஞச்சாரியாராகச் செயலாற்றும் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூராரின் கடமையாக அனைத்து அடியான்கள், அடியாள்கள், அடியார்கள், ஆதரவாளர்கள், ஆர்வலர்கள், ... முதலியோரின் உதவியால் இக் கீதை வெளியிடப் படுகிறது.

# கருவூரார் கீதை

**தமிழே தெய்வம்.**

**தமிழே அருளுலகக் காவல் சத்தி.**

**தென்னாடுடைய சிவனே போற்றி!**

**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!**

**பதினெண்சித்தர்களின் இந்துமதம் ஒரு வாழ்வியல் நெறி.**

**அண்டபேரண்டங்களில் வாழும் விண்ணுலக மதமே பதினெண்சித்தர்களின் இந்துமதம்.**

பயிரினங்களையும், உயிரினங்களையும் நல்வாழ்வு பெறச் செய்த முதல் மதமே இந்துமதம்.

இம் மண்ணுலக அறிவுலக வரலாற்றின் விளக்கமே இந்துமதம்.

இம்மண்ணுலகில் தோன்றிய முதல் மனித இனமான தமிழினமே இந்துமத நாற்றங்கால்.

இந்துமதமும் தமிழ்மொழியும் பிரிக்க முடியாதவை.

தமிழில்லாத இந்துமதம் நீரில்லாத பயிர் போல் வாடிடும்.

தமிழே உலக மொழிகளின் தாயென்பது போல் இந்துமதமே உலக மதங்களின் தாய்.

தாய்மொழி ஒலி அடிப்படையிலுள்ள பூசாமொழி வாசகங்களே உலக அருள் வித்துக்கள்.

தமிழர்களே என்றென்றும் அருளை விளைவிக்கும் ஆற்றலைப் பெற்றிருப்பர்.

தமிழகம் இருண்டாலோ, வறண்டாலோ அருளுலகில் தீயன செழித்திடும்!

தமிழின மலர்ச்சியே அருளுலக வளவளர்ச்சி.

உலக மதங்களுக்குப் பீடாதிபதிகளின் கீதைகளே உயிரோட்டம்.

தமிழையும் இந்துமதத்தையும் நம்பிட நான்குயுக வரலாறுகள் புரிய வேண்டும்.

தமிழர்களே நான்கு யுகங்களின் தலைவர்கள்.

**தமிழையும் இந்துமதத்தையும் அநுபவத்தாலேயே அறியலாம்! புரியலாம்!**

**தமிழும் இந்துமதமும் விண்ணுலகக் கொடைகள்.**

**தமிழும் இந்துமதமும் மண்ணுலகினரின் உயிரும் உடலுமாகும்.**

**தமிழே அனைத்து அருட்சத்தி சித்திகளையும் வழங்க வல்லது.**

**எக்காலத்தும் தமிழும் இந்துமதமும் மானுடரின் கண்களாகும்.**

**தமிழரின் வழிபடுநிலையங்களும் வாசகங்களுமே உலக மதப் பிணைப்பையும், இணைப்பையும் காக்கும்.**

**தமிழே மனித வாழ்வின் ஆரம்பத்தையும் முடிவையும் விளக்கிடும்.**

**இந்துமதமே மனித வாழ்வைப் பயனுடையதாக்கும்.**

... ... ...

என்ற கீதை வாசகங்களை எடுத்துக்காட்டாகக் குறித்து முன்னுரையை நிறைவு செய்கிறோம் யாம்.

இந்த முதல் கீதையாவது விரைவில் அச்சேறி வெளிவந்திடச் சிறுதுளி பெருவெள்ளம் என்பது போல்; அனைவரும் அவரவரால் இயன்ற தொகைகளை நாளையென்று நினையாமல் உடனே அனுப்பி உதவுங்கள்.

**தமிழ் வாழ்க! மதம் தழைத்திடுக!**

**தமிழினம் பிழைத்திடுக! மொழிப்போர் துவங்கிடுக!**

**இன விடுதலை கிளைத்திடுக! சமத்துவம் ஓங்கிடுக! பொதுவுடமை மலர்ந்திடுக! ...**

என்று மனதுக்குள்ளும், வாய்விட்டும் முழக்கமிடுபவர்கள் கருவூராரின் கீதைகளும், சித்தர்களின் நூல்களும் அச்சாகிடத் தங்களால் இயன்ற உதவிகளை வழங்கிட முன்வருக! முன்வருக! முன்வருக!

இதுவரை எந்தத் தமிழ்ப் புலவனும் படித்திடாத, கேள்விப்பட்டிடாத கருத்துப் புதையல்களே சித்தர்களின் இலக்கியங்கள்!

ஐந்நூறு கோடியாண்டுத் தொன்மையுடைய உலகையே விளக்கிடும் அரிய பெரிய கூரிய சீரிய நேரிய செய்திகள் சித்தர்களின் இலக்கியங்களில்தான் உள்ளன.

விஞ்ஞானிகளும், மெய்ஞ்ஞானிகளும் விண்டுரைத்திடாத செய்திகளும், கருத்துக்களும் சித்தர்களின் இலக்கியங்களில்தான் உள்ளன.

தமிழ்மொழியின் தொன்மையும், தமிழினத்தின் மேன்மையும் விளங்கிட வேண்டுமென்றால் எவராலும் எண்ணிப் பார்க்க முடியாத எண்ணற்ற செய்திகளை விளக்கும் சித்தர்களின் இலக்கியங்கள் அச்சிடப்பட்டேயாக வேண்டும்.

அறிவுப்பசியும், அருள்தாகமும் தீர்த்திடும் காயகல்பமான கருவூராரின் கீதைகள் வெளிவரத் தமிழர்களே தாராளமாக உதவிட முன்வாருங்கள்!

எங்களால் இயன்ற முதல் முயற்சியாகவே இந்த முதல் விசயாலயனுக்குக் கூறப்பட்ட கீதை அச்சாகி வெளிவருகிறது.

தமிழினம் தூங்கவில்லை யென்பதை உணரும் வாய்ப்பு வரப்போகும் உதவிகளால்தான் நிர்ணயிக்கப்படும்.

உண்மை வரலாறு; கதைகளையும், கற்பனைகளையும், கனவுகளையும்..... கடந்த வியத்தகு செய்திகளையும், கருத்துக்களையும் வழங்கப் போவதை இக் கீதையால் உணரலாம்.

**எம் கடன் பணி செய்து கிடப்பதே. எம் இனமும், மொழியும், நாடும் இழந்த மானத்தைப் பெற்றிட உழைப்பதே எமது தொழில்.**

**பணிவும், துணிவும், கனிவும், உண்மையுமே எமது வாழ்வு.**

**அன்பு**

**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூறார்.**
**12-3-85.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூல நகல்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது. யாருடைய கையெழுத்து என்பது தெரியவில்லை.//**

1/1/1985,
சென்னை-11.

## கருவாக்கு, குருவாக்கு, தருவாக்கு, திருவாக்கு, அருள்வாக்கு, மருள்வாக்கு, கருவாசகம் ... முதலியனவற்றின்

# குருபாரம்பரிய வாசகம்.

"... குருதேவர் என்பவர் யாருக்கும் முதலாளியாகவோ, தலைவனாகவோ இருக்க விரும்புகிறவர் அல்ல. அவர்கள் அனைவருக்குமே நலம் விளைவிக்கும் தொழிலாளியாகவும், தொண்டர்களாகவும் இருப்பவர்களே; அவர்களுடைய வாக்கும், வாசகமும், நோக்கும், போக்கும், ஊக்கும்..... அனைவரின் நலிவு, மெலிவு, முடக்கம், ஒடுக்கம், தொல்லை, துன்பம், தோல்வி, கவலை, ஏக்கம், ஏமாற்றம், புரியாமை, அறியாமை, இல்லாமை, இயலாமை, ... முதலிய குறைகளை அகற்றுவதற்காகத்தான் பயன்படுபவை. குருதேவர், இன்றைய உலகியல் நடைமுறைகளுக்கெல்லாம் முந்தியவர் என்பதால்; உலகியலுக்கு உட்பட்டுச் செயல்பட முடியாத இக்கட்டுக்களையும், குற்றச்சாட்டுக்களையும், மறுப்புக்களையும், விருப்புக்களையும், துரோகங்களையும், விரோதங்களையும் சமாளித்தே செயல்பட வேண்டியிருக்கிறது. எனவே, **குருதேவர் என்பவர் அருளுலகில் வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப்பயனாக செயல்படுவதென்பது அவரிடம் அருள்நலம் வேண்டுபவர்களின் தரம், உரம், திரம், தீரம், அறம், மறம், ஆர்வம், மனப்பக்குவம், சிந்தைத் தெளிவு, குரு நம்பிக்கை, இரகசியம் காக்கும் பண்பு ... முதலியவைகளுக்கு ஏற்பத்தான் அமையும்...**"

“மதியும் விதியும் இணைந்தால் பசு, பதி, பாச நிலைகள் குருவழி சித்திக்கும்.”

**- கருவாசகம்.**

“... தமிழகம், தென்னிந்தியா, இந்தியா, உலகம் என்று அனைத்திலும் **‘சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்’** அமைக்கப் புறப்பட்டிருக்கும் உண்மையான இந்துமதத்தின் வாரிசுகளே யாங்கள். எனவே, கற்பூரத் தட்டும், பூசைமணியும் பிடித்து நிற்கும் பூசாறி, உடுக்கையடிகாரன், கோடாங்கி, குறிகாரன், ... என்று தவறுக எண்ணிட வேண்டாம். அருளுலகத்திலும், பொருளுலகத்திலும் உள்ள திருடுகள், ஏமாற்றுக்கள், பொய்கள், சுரண்டல்கள், வறுமைகள், கொடுமைகள், இருள்கள், ஏதேச்சதிகாரங்கள் ... முதலிய அனைத்தையும் **‘மதவழிப் புரட்சி’** மூலம் போக்கிட அணி வகுத்திருக்கும் புதுமை விரும்பிகளே, பகுத்தறிவு வாதிகளே, சீர்திருத்த வாதிகளே, ... நாங்கள் எனக் கூறி நிறைவு செய்கிறோம்...”

**அன்பு**

**தலைமைப் பணியாளர்,**
**சித்தரடியார், சித்தர் மகன், சித்தர் பதிலி,**
**சோ.இரவீந்திரன்.**
**1/1/1985.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூல நகல்: சித்தரடியார் திரு சோ.இரவீந்திரன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# மந்திரவாதிகளை வெல்ல வழி கூறும் அஞ்சல்

5/4/84,
பெரம்பூர்.

ஓம் தாத்தா கருவூருரே போற்றி!

பேரன்புடைய ஆலவாய் செல்லத்தம்மன் சன்னிதானம் சித்தரடியார் வேம்படியான் மணி அவர்கள் சமூகத்திற்குத் தங்களன்புள்ள சித்தர் மகன், சித்தரடியார் தெய்வீகாச்சாரியார் எழுதிக் கொண்ட (குருவாணை பெற்று) அஞ்சல்.

(1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளால் யாவும் நலமாகட்டும், நன்மையாகட்டும், உண்மையாகட்டும்.

(2) தங்களின் அ.எண்-3, அடக்கம்: 4, நகல்கள்: 6 முதலியன கிடைத்தன. மிக்க மகிழ்ச்சி. நன்றி.

(3) தாங்களும் நமது அடியான்களும் செயல்பட வருவது குறித்து குருதேவர் மகிழ்கிறார். ஆனால், மந்திரவாதிகளுக்கு முதலிடம் கொடுத்து இனித் தாங்களோ நம்மவர்களோ பேசக் கூடாது எனக் கூறி விட்டார். ஏனெனில், பேய், பிசாசு, பில்லி, சூன்யம், ஏவல், செய்வினை, வைப்பு, கழிப்பு, மருந்து என்ற ஒன்பது பைசாசக் கலைகளையும் படைத்து உலகுக்கு வழங்கினர் பதினெண்சித்தர்கள்.

இதை விட கீழ்த்தரமான, மோசமான, அடிமட்டமான கலைகளை வைத்து வயிறு பிழைக்க தொழில் நடத்துபவர்களே மந்திரவாதிகள். சித்தர்களுக்கும், அவரது மாணாக்கர்களுக்கும் எதிர் மந்திரமே கிடையாது; என்றுமே எதிர்த்துச் செயல்பட முடியாது. எனவே, தாங்களும் நமது அடியான்களும் துணிந்து செயல்பட்டாலேயே அனைத்தும் அஞ்சியும், கெஞ்சியும் அகன்றிடும்.

(4) 1008 அண்டங்களுக்கும் அதிபதியான தாத்தா பாண்டி முனீசுவரர், மொட்டைக் கோபுரத்து முனீசுவரர் அவர்களின் பேரருகிய நமது குருதேவரின் பட்டங்களைக் கூறினாலேயே அனைத்தும் அகன்றிடும்.

(5) வீரமாகாளி சன்னிதானப் பால்குட விழாவை சிறப்பாக நடத்திட இப்பொழுதிருந்தே அனைவரும் ஒன்று கூடி முறையாகவும், நிறையாகவும் செயல்பட்டிடுங்கள். விரைந்து குருதேவர் ஏட்டிற்கு சந்தா சேர்த்து அனுப்புங்கள். இனி மந்திரவாதி பற்றி கவலையில்லாமல் விரைந்தும் விரிந்தும் செயல்பட்டு இ.ம.இ., அ.வி.தி., ... வளர்க்கப் பாடுபடுங்கள். அனைவருக்கும் எம் அன்பைக் கூறுங்கள்.

அன்பு

சித்தரடியார், சித்தர் மகன்,
சோ.இரவீந்திரன்.
5/4/84.

**//உண்மை நகல்//**

<u>நகல் நல்குபவர்</u>:

அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம்,
குருவழி வாரிசு, சித்தரடியார் சீ.மணி.

**//இதன் மூல நகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

22.3.1985,
சென்னை-11.

# வ.ஆ. மாவட்டச் சுற்றுப்பயண ஆய்வுமடல்

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே!

2) பெரிய நெடிய இடைவெளிக்குப் பிறகு, தாத்தாக்கள் ஆத்தாக்கள் திருவுளப்படி வ.ஆ. மாவட்டத்தில் நமது அமைப்புக்கள் அனைத்தும் முளைத்துக் கிளைத்துச் செழித்து வளர ஆரம்பித்திருக்கின்றன. இந்த வளர்ச்சி வாடி விடாமல், வதங்கி விடாமல் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால்; அருட்பயிர் விளைவிக்கும் பேருழவனான குரு நேரடியாக அருட்பயிரைக் கண்காணிக்க வேண்டும் என்ற தத்துவமே சித்தர்களின் இலக்கியங்களில் வற்புறுத்தப்படுகின்றது.

இதன்படியே யாம், வ.ஆ.மாவட்டச் சுற்றுப் பயணத்தை வருகின்ற ஏப்ரல் திங்கள் 1985 - 7,8,9 ஆகிய மூன்று நாட்களும் மேற்கொள்ள உள்ளோம். இது பற்றி நமது நண்பர்கள் தங்களுடைய கருத்து நிலைகளை, செயல்திட்ட நிலைகளை, ஆர்வ நிலைகளை, ஆதரவு நிலைகளை, பிற வசதிவாய்ப்பு நிலைகளை, ... உடனடியாக ஒளிவு மறைவின்றி விளக்கிடுமாறு வேண்டுகின்றோம்.

அன்புகூர்ந்து, காலதாமதமின்றி தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தால்தான். இச் சுற்றுப்பயணத்தை வெற்றியும் பயனும் உடையதாக ஆக்கிட முடியும். எனவே, இதற்கு உதவி அருளுமாறு வேண்டுகிறோம்.

3) பகுத்தறிவுவாதிகள், நாத்திகர்கள், சீர்திருத்தவாதிகள், சமுதாய மாற்றத் தீவிரவாதிகள், ... முதலியோர் நம்மை; மதவெறியர்கள்,

பழமைவாதிகள், பிற்போக்குவாதிகள், மூடநம்பிக்கைக்காரர்கள் என்றெல்லாம் கருதி; நம்முடைய பணிக்கு ஒத்துழைப்புத் தர மறுப்பவர் அல்லாமல்; நம்மை எதிர்த்து நமக்குப் பல தொல்லைகள் தருகிறார்கள். இத்தகைய பயனற்ற முயற்சிகளில் அவர்கள் எல்லாம் ஈடுபடாமல் தடுக்க வேண்டும். இல்லாவிட்டால், அவர்களுடைய கருத்தும், காலமும், முயற்சியும் பயனின்றிச் செலவாவது போல்; நம்முடைய கருத்தும், காலமும், முயற்சியும் பயனின்றிச் செலவாகிடும்.

அதாவது, நம்மை எதிர்ப்பவர்களும், மறுப்பவர்களும் சமசுக்கிருதம், வேதமதம், வடஆரியத் தலைமை, மதச் சுரண்டல், ஏமாற்று, மடமை,... முதலியவைகளை யெல்லாம் **அகற்றிட விரும்புகிறார்கள்**; அல்லது அழித்தொழிக்க விரும்புகிறார்கள். அதனைச் செய்யக் கூடிய வல்லமை நமது தத்துவத்துக்கும், செயல் சித்தாந்தத்திற்கும் உண்டு! உண்டு! உண்டு! என்பதனை அவர்கள் புரியுமாறு செய்ய வேண்டும்.

இதற்கோர் உதாரணம் சொல்ல விரும்புகிறோம். விளையும் பயிர்களுக்கு கேடு செய்யும் பூச்சிகளை ஒழிக்கக் கூடிய மருந்து கசப்பானதாகவும், நச்சுத் தன்மையுடையனவாகவும் இருந்த போதிலும்; உழவன் அதைப் பயன்படுத்தித்தான் பயிரைப் பாதுகாக்கிறான். இதைப் போலவே, தமிழ்மொழி, இன, நாடு, பண்பாடு, நாகரிகம்... என்பனவற்றைப் பாதுகாக்க விரும்புகிறவர்கள் அவற்றிற்குக் கேடு பயக்கின்ற மேற்குறிப்பிட்ட அனைத்தையும் அழித்திட நமது மதக் கோலத்தையோ, செயல்களையோ கசப்பானவைகளாகவும், நஞ்சானவைகளாகவும் கருதாமல்; நம்மைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஏனெனில், முதல்கட்டமாக ஆரிய மாயை, சமசுக்கிருத மாயை, பிராமண ஆதிக்கம், தமிழின ஒற்றுமையின்மை, தமிழ்ப் பற்றின்மை ... முதலிய தீமைகள் அனைத்தையும் நம்மால்தான் விரைந்தும் விரிந்தும் அழிக்க முடியும்! அழிக்க முடியும்! அழிக்க முடியும்! அதாவது, இன்றைய நாத்திக வாதிகளும், பகுத்தறிவு வாதிகளும் கொசுக்களையும், மூட்டைப் பூச்சிகளையும் ஒழிக்க கசப்பான கொடிய

நஞ்சான மருந்தைப் பயன்படுத்துவது போல்; தீவிர மதவாதிகளான நம்மைப் பயன்படுத்தித்தான்; சமய சமுதாய கலை இலக்கிய அரசியல் துறைகளில் உள்ள அனைத்துத் தீமைகளையும் ஒழிக்க முடியும்! ஒழிக்க முடியும்! ஒழிக்க முடியும்!

4) நண்பர்களே! இன்றைய நிலையில் தமிழுணர்வும், இனப்பற்றும் மிகுதியாக உடைய நம்மவர்களுக்கிடையே போராட்டம் வந்துவிடக் கூடாது. எனவே, தமிழர்களுக்கிடையிலே பற்றும், பாசமும், ஒற்றுமையும், ஒருமைப்பாடும் விழிச்சி பெற, எழுச்சி பெற, செழுச்சி பெறவே நாம் உழைக்க வேண்டும். இந்தத் தெளிவான கொள்கையையும், குறிக்கோளையும் உணர்ந்தும் உணரவைத்தும், புரிந்தும் புரியவைத்தும் செயல்படுபவர்களாகவே நமது செயல்கள் அனைத்தும் அமைய வேண்டும்.

எனவே, தமிழினத் தலைவர் தந்தை பெரியார் ஈ.வெ.ரா.வின் திருவுருவப் படத்தையும்; பொதுவுடமைச் சித்தாந்தத்தை இன்றைய உலகுக்குச் செயல்வடிவச் சித்தாந்தமாக்கிக் கொடுத்த காரல்மார்க்சின் திருவுருவப் படத்தையும் நமது அனைத்துவிதமான மேடைகளிலும், நிகழ்ச்சிகளிலும், ஏடுகளிலும், ... தெளிவாக அறிவித்தே செயல்பட வேண்டும் நாம். இதற்கேற்ப, கற்றோரிடமும் மற்றோரிடமும் கலந்துரையாடல், சொற்பொழிவாற்றல், அருளுரை வழங்கல், அருள் வழங்கல் ... முதலிய நிகழ்ச்சிகளுக்கு எல்லா ஊர்களிலுமே ஏற்பாடு செய்யுங்கள்.

அதாவது, நாம் மந்திரவாதிகளின் கூட்டமல்ல! பூசாறிகளின் கூட்டமல்ல! பசனைவாதிகளின் கூட்டமல்ல! மடமைவாதிகளின் கூட்டமல்ல! தமிழின நலவிரோதக் கூட்டமல்ல! ... என்ற பேருண்மையை ஒவ்வொரு மூச்சிலும், பேச்சிலும், சொல்லிலும், செயலிலும் விளக்கியே செயல்பட்டாக வேண்டும்! செயல்பட்டாக வேண்டும்! செயல்பட்டாக வேண்டும்! இதனைப் புரிந்தும் புரியவைத்தும் செயல்படுக!

5) எமது வருகை உங்களுடைய நண்பர்களுக்கிடையில் கலந்துரையாடக் கூடிய ஒன்றாகவும்; பள்ளிகள், கல்லூரிகள் முதலியனவற்றில் சொற்பொழிவாற்றக் கூடிய ஒன்றாகவும்; பொதுமேடைகளில் அறிவுரை வழங்கக் கூடிய ஒன்றாகவும்; வழிபாட்டு நிலையங்களில் அருளுரை வழங்கக் கூடிய ஒன்றாகவும்; அனைத்து மதவாதிகளிடமும் அருளார்ந்த அறிவுரை வழங்கக் கூடிய ஒன்றாகவும்; அனைத்துவிதமான மத எதிர்ப்பாளர்களிடமும் அறிவார்ந்த அருளுரை வழங்கக் கூடிய ஒன்றாகவும்; இலக்கியவாதிகளிடம் இலக்கியப் பேச்சாற்றக் கூடிய ஒன்றாகவும்; தத்துவவாதிகளுக்கு தத்துவ விருந்தளிக்கக் கூடிய ஒன்றாகவும்; சீர்திருத்தவாதிகளுக்கு வழிகாட்டக் கூடிய கருத்துரை வழங்கக் கூடிய ஒன்றாகவும்; யோகிகளுக்கும், ஞானிகளுக்கும் மெய்ஞ்ஞானப் பயிற்சிகளை வழங்கக் கூடிய ஒன்றாகவும்; ... அமைந்திட வேண்டும்! அமைந்திட வேண்டும்! அமைந்திட வேண்டும்! இதற்கேற்பச் சிந்தித்துச் செயல்படுங்கள்! செயல்படுங்கள்! செயல்படுங்கள்!

**<u>குறிப்பு</u>:-** 5,6,7-4-1985 மூன்று நாட்களும் வ.ஆ.மாவட்டச் சுற்றுப்பயண நிகழ்ச்சியின் விவரம் உடனே தொகுத்து அனுப்புங்கள். விரைந்தும் விரிந்தும் செயல்படுங்கள்! (எங்கெங்கு தங்குவது, சொற்பொழிவாற்றுவது ... என்ற விவரம் தேவை.)

அன்பு
குருதேவரின் பதிலி,
தலைமைப் பணியாளர், ஈசுவரர்,
சோ.இரவீந்திரன்.
22/3/85.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: முதல் பகுதி ஒருவரின் கையெழுத்திலும், மீதிப் பகுதி சித்தரடியார் திரு பெ.சௌந்தரராசன் அவர்களின் கையெழுத்திலும் இருந்தது.//**

# தமிழின ஒற்றுமைச் செயல்சித்தாந்தம்

1) 27.3.85இல் ஞாலகுரு சித்தர் கருவூரூர் மதுரைத் தாயுமானவர் சன்னிதானம் சித்தரடியான் M.C.இராமன் அவர்களுக்கு 26.3.85 இரவு அருள்தாசபுர யாகசாலைப் பாதிப்பு பற்றி எழுதும் செயல் சித்தாந்தம்.

(M.C.இராமன், 248K, இரயில்வே காலனி, மதுரை-625010)

2) இனிய நண்பா! நம்மவர்களுக்கிடையிலே மன ஒற்றுமை ஏற்பட வேண்டும். இதனடிப்படையில் தழைக்கும் பற்று, பாசம், தோழமை, நட்பு, ஒருமைப்பாடு, தத்துவப்பற்று, தலைமை நம்பிக்கை, இயக்கச் செயல்திட்டத்தில் ஈடுபாடு ... முதலியவைதான் நம்மை வலிமைப்படுத்தும். எனவே, போட்டி, பொறாமை, பகைமை, பழிவாங்கல், வஞ்சம் தீர்த்தல், காட்டிக் கொடுத்தல், துரோகம், விரோதம், ... முதலிய இழிந்த பண்புகள் முற்றிலும் அழிந்த நிலை நமக்குள் ஏற்பட்டேயாக வேண்டும். அதுதான் நமது நிலையை வளப்படுத்தி வாழ்வுறுத்தும். அத்தகைய பெரிய நிலையை அடைந்த பிறகுதான்; நம்மால் எதிரிகளைப் பற்றி எண்ணிட முடியும்! எனவே அமைதி காத்திடுக!

3) நமது நாட்டில் அன்னிய மதத்தவர்கள் தெருக்களில் நின்று மதச் சொற்பொழிவு, விவாதம், அருட்பணி, ... முதலியன செய்கிறார்கள். அதற்கு எதிர்ப்பே இல்லை. தமிழினப் பகைவர்களான பிரமணர் தங்களின் பூசை, விழா, தலைவர் சங்கராச்சாரியார் உலா... முதலிய அனைத்தையும் சிறப்பாகச் செய்கிறார்கள். **ஆனால், தமிழர்களாகிய நாம், தமிழ்மொழியில் பதினெண்சித்தர்களின் மதத்தைச்**

**செயலாக்கும் போது மட்டும் எதிர்ப்பா?** சிந்திக்க வேண்டும்! புரிய முயல வேண்டும்!

3) நமக்குப் பகைவர்களையோ, எதிரிகளையோ எண்ணிப் பயமே இல்லை. ஆனால் நம்மிடையே உள்ள துரோகிகள், கருங்காலிகள், தமிழின அப்பாவிக் கூலிகள், போலிகள், ... முதலியோர் பற்றியே மிகமிகப் பயப்படுகிறோம். ஏனெனில், தமிழனும் தமிழனும் அடித்துக் கொண்டால் தமிழினப் பகைவர்களுக்கு வலிவும், பொலிவும், வாழ்வும், வளமும், வெற்றியும் ஏற்பட்டிடும். எச்சரிக்கை!

4) பகுத்தறிவுப் பகலவன் பெரியார் ஈ.வெ.ரா. பெயராலும், பொதுவுடமைத் தத்துவம் வழங்கிய காரல்மார்க்சு பெயராலுமே செயல்படுகிறோம் நாம். எனவே, யாராவது சில முன்கோபக்காரர்களோ! அவசரக்காரர்களோ! ஆத்திரக்காரர்களோ! ... நமது அருட்பணிக்குத் தீங்கு விளைவித்திட்டால் அதைப் பெரிதுபடுத்த வேண்டாம். நிதானமாகவும், சமாதானமாகவும் பொறுமையோடு செயல்படுங்கள்.

5) அருள்தாசபுர பெரியவர் நீலமேகம்பிள்ளை மற்றும் அவ்வட்டாரத்தார் ... அனைவரையும் கலந்து பொறுமையாகச் செயல்படுக! காவல்துறைக்கு (Police) அவசரமாகச் செல்ல வேண்டாம். **முதலில் அருள்தாசபுர வட்டாரப் பெரியவர்கள், கட்சித் தலைவர்கள் ... முதலியோர்களிடம் செய்தியைக் கூறி, அவர்களின் கருத்தை அறிந்து அதன்படியே செயல்படுங்கள். பதற வேண்டாம்**.

6) இனிமேல் யாகசாலையைப் புதன் மாலை தோண்டிப் பூசைசெய்து விட்டு மணல், மண் கொட்டி மூடிவிடுங்கள். திரிசூலம், கொடி கையில் கொண்டு போய் நட்டு வைத்து யாகம் செய்து முடிவில் அவ்வப்போது கையோடு எடுத்து வந்து விடுங்கள்.

7) மதுரை மாநகரத்தார் முடிந்தவரை கட்டுப்பாடாக யாகப் பூசைகளில் கலந்து சிறப்பிக்கும் பழக்கம் ஏற்பட்டால்தான் நமது வலிமை பிறர்க்குப் புரியும்.

அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே. பொறுப்போம்! வெல்வோம்!

உடன் பதில் அனுப்புக!

அன்பு
**குருதேவர், தலைவர்,**
**ஞானத்தந்தை, குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**
27.3.85 இரவு 11 மணி.

<u>நகல் எடுத்தவர்:</u>

அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம்,
ஞானக்காட்சிச் செல்வன், சித்தரடியான் M.C. இராமன்,
248K, இரயில்வே காலனி, மதுரை-625010.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு ம.சி.இராமன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# ஐய விளக்க மடல்

ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் கருவூரார்.
சென்னை-11.
21-12-84.

**"தமிழின விடுதலைத் திட்டங்களுக்கு எந்தத் தனிமனித விருப்பும் வெறுப்பும் கெடுதலையாக அமைந்து விடக் கூடாது..."**

**- குருபாரம்பரியம்.**

1) மூன்று உகங்களாகக் கொடிகட்டிப் பறந்த இந்துமதமும், கோலோச்சிய தமிழினமும்; கலியுகத்தில் இந்தியாவுக்குள் நுழைந்த அன்னியரான (பிற + மண்ணினர் => பிருமணர்) பிருமணரால் வீழ்ச்சியும், தாழ்ச்சியும், தொடர் ஆழ்ச்சியும் பெற்றுவிட்டன. இவற்றை விடுவிக்கப் பத்தாவது, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகள் மிகத் தெளிவான செயல்திட்டங்களை வகுத்துக் குருவாக்குகளாக, குருவாசகங்களாக, குருபாரம்பரிய வாசகங்களாக, அரசபாரம்பரிய வாசகங்களாக, இலக்கிய பாரம்பரியங்களாக வடிவப்படுத்தினார்கள். இருவரும் முறையே சமுதாயவாதியாகவும் (The 10th Peedam was a Sociologist), அரசியல்வாதியாகவும் (The 11th Peedam was a Politician) செயல்பட்டுத் தோல்வியே பெற்றனர்.

எனவேதான், யாம் மிகத் தெளிவாகத் தத்துவவாதியாக (Philosopher), முழுமை மாற்ற முயற்சியாளனாக (Radicalist), பகுத்தறிவுவாதியாக (Rationalist), சித்தாந்தியாக (Theologist), அருளுலக விஞ்ஞானியாக (The Scientist of the Occult Sciences, Temple Sciences and Tantric Sciences), சமயநெறி வல்லுனராக (The

Doctor of the Religious Doctrines and the Esoteric Doctrines), தெய்வீகக் கலைஞனாக (The Mystic and an Artist of all kinds of Black Arts, Witchcrafts, Sorcery, Arts of Enchanting and Arts of the Ghosts), அருளாளனாக (The Divinator), சமயாச்சாரியாராக (The Sage, The Saint, The Preacher and Teacher of the Holy Principles, Policies, Rituals, Customs and Manners, Faiths and Beliefs, Facts and Fictions, Legends and Mythologies, Puranas and Ithihaasas, Holy hymns and Sacred Verses, Agamas and Vedas ... etc), பாரம்பரியப் பைந்தமிழினத் தலைவனாக (The Hereditary Leader and Guide of the Tamilian Race), இந்துமதத் தந்தையாக (The Founder and the Father of The Induism), ஞானாச்சாரியாராக (The Propagator of the Learnings dealing with Ultimate Realities), மார்க்சீயச் சிந்தனையாளனாக (The Marxist), இலக்கியவாதியாக (Man of Literature), ... உருவாக்கப் பட்டோம் எமது தந்தையால்.

அவரே தமது கடைசிக் காலத்தில் 'நான் எழுதி முடித்த வீர காவியம் நீ'; 'இந்திய மண்ணில் என்றைக்குமே அருளுலக இருள் வராதபடி தோற்றுவிக்கப் பட்டுவிட்ட ஞானசூரியனே நீ'; 'சமய சமுதாய அரசியல் கடுமைகளையும், கேடுகளையும், கொடுமைகளையும் முடிவுகட்டக் கூடிய முழுமைப் புரட்சிவாதியாக உருவாக்கப்பட்டவனே நீ'; 'உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைக்க உருவாக்கப்பட்ட தலைமைச் சிற்பியே நீ'; 'உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை முழுமைப்படுத்த உருவாக்கப்பட்ட அருளாசானே நீ'; ... என்று எண்ணற்ற புகழுரைகளைக் கூறிடுமளவுக்குத் தயாராகியுள்ளோம் யாம்.

2) இவற்ருல்தான் யாம், மிகமிகத் தெளிவாக அச்சமோ, கூச்சமோ, ஆச்சரியமோ, மாச்சரியமோ, இச்சையோ, ... இல்லாமல் பதினெண்சித்தர் பீடாதிபதிகளும், மற்ற சித்தர்களும், ... அருளுலகக் கலைஞர்களும் **‘எழுதாக் கிளவிகளாக’** விட்டுச் சென்றுள்ள குருவாக்குகளையும்; எழுதப்பட்டும் மறைத்துச் சென்றுள்ள ‘மறை’களையும் (குறிப்பிட்டவர் மட்டுமே கற்கும் ‘இரகசியங்கள்’ = மறைகள்); எழுதப்பட்டு அனைவரும் வாசித்திடுமாறு விட்டுச் சென்றுள்ள குருவாசகங்களையும், முறையான தொடர் வரலாறுகளாகப் பதினெண்சித்தர் பீடாதிபதிகளுக்கு மட்டுமே உரியதாக (The Textbooks or Manuals of the Pathinensiddhar Peedaathipathis only) எழுதப்பட்ட குரு பாரம்பரியங்கள் (Religious History), அரச பாரம்பரியங்கள் (Political History), இலக்கிய பாரம்பரியங்கள் (History of Language and Literature), ... முதலியவைகளையும் அப்படியே முழுமையாகச் செயலாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம்.

இதற்காகவே, ‘வெளியே கூறினுல் பாவம்; தலைவெடிக்கும்; ஆயிரம் காராம் பசுக்களைக் கொன்ற பாவம் வரும், ...’ என்ற கண்டிப்பு அச்சுறுத்தல்களையும் நுட்பமாக வென்று பெரும் பகுதிக் கருத்துக்களை அப்படியே எழுதி, கூறி, அச்சிட்டுச் செயல்படுகிருேம் யாம். இதில் ஏமாற்ருே, வஞ்சகமோ, சூழ்ச்சியோ, பித்தலாட்டமோ, ஒருதலைச் சார்போ, விதிவிலக்கோ, ... இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை. புரிந்து செயல்படுக!

3) ஒரு மாபெரும் அருட்புரட்சியால் ‘தனிமனித விடுதலை’, ‘குடும்ப விடுதலை’, ‘மொழி விடுதலை’, ‘சமுதாய விடுதலை’, ‘இன விடுதலை’, ‘பண்பாட்டு விடுதலை’, ‘நாட்டுரிமை விடுதலை’, ... முதலிய பல விடுதலைகளைப் பெறுவதற்காக அருட்படை திரட்டும் **மதவழிப் புரட்சித் தலைவனே நான். நானேர் தத்துவப் புரட்சி நாயகன்.** எனக்கு உலகியலாக அழிவு வந்துவிடக் கூடாது

என்பதற்காகவே என்னை மூன்று மாதப் பச்சிளங் குழந்தைப் பருவத்திலிருந்தே நவநஞ்சுகளை ஊட்டி **'நஞ்சுண்ட மேனியனாக'** வளர்த்தார் புரட்சிச் சிந்தனை மேதையான என் தந்தை. (இதனை 36 அகவை கடந்து பதினெண்சித்தர் பீடாதிபதியாக அதிகாரம் பெற்ற பிறகே முறித்து மாற்றி இல்லறமேற்றேன். இப்பொழுது மீண்டும் நவநஞ்சுண்கிறேன்.)

4) எனக்கு விரோதிகளின் தொல்லைகளை விடத் துரோகிகளின் தொல்லை வந்துவிடக் கூடாது என்பதால்தான்; சித்தர்நெறி,

a) இந்துமத ஆர்வலர், விருப்பாளர், நம்பிக்கையாளர், பத்தர், ... சிறந்து செயல்பட 48 வகை வழிபடு நிலையங்களையும் புத்துயிர்ப்புச் செய்கிறது. முடிகயிறு, தாயத்து, சக்கரம் வழங்குகிறது. அருட்கணிப்பு வழங்குகிறது.

b) இந்துமதம் காக்க, உழைக்க முன்வருபவர்களுக்கு கடவுட் கலைகள், தெய்வீகக் கலைகள், பேய்க் கலைகள், நோய்க் கலைகள், தேய் கலைகள், ... அருட் கலைகள், ஆய கலைகள், ... கற்று அருளுலகக் கலைஞர்களாக உயருவதற்கு ஏட்டறிவும், பட்டறிவும் வழங்கப் படுகின்றன.

c) தாங்களே அருளை அநுபவப் பொருளாக அடைய முயலுபவர் அ.வி.தி. நிலையங்களிலும், குருகுலங்களிலும் ... பதின்மூன்று வகை அருளாளராகிட வாய்ப்பு வழங்குகிறது.

**இவையல்லாமல் விரைந்தும் விரிந்தும் குறுகிய கால அளவில் அருளுலக அறிமுகமும் அநுபவமும் பெற்று, முக்காலமும் முற்பிறப்பும் அறிந்து; பிறர்க்கு அருள் வழங்கவும், அருட்புரட்சியில் பங்கேற்கவும் ... விரும்புகிறவர்களிடம் மட்டுமே ... குருபாரம்பரிய மரபுப்படி உறுதிமொழிகள் வாங்கப்படுகின்றன**. இதில், ஆரம்பமே:-

“......[பெயர் குறிப்பிட்டு] நான் அறிவு விழித்த நிலையில், யாருடைய வற்புறுத்தலோ, அச்சுறுத்தலோ இன்றி எந்தவித இச்சையோ, கூச்சமோ இன்றி முழுமையான நம்பிக்கையோடும், விருப்பத்தோடும்தான் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறூரின்; மதுரைப் பாண்டி முனீசுவரர், மொட்டைக் கோபுரத்து முனீசுவரர், கரூர் நாட்ராயர், வீரப்பூர் மந்திற மகாமுனீசுவரர், ... முதலியோரின் பேரனும் உரிமை வாரிசுமான இராசிவட்ட நிறைவுடையார், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூறூர், எட்டாம்பிறப்பு, நல்லிலக்கண மார்புடையார், மகமீனுடையார் அவர்களிடம் அருளுலகப் பயிற்சி பெற வந்திருக்கிறேன். நான் எனது ஆவி, ஆன்மா, உயிர், உடல், பொருள், சொந்தம், சொத்து, உறவு, உரிமை, புகழ், சித்தி, சத்தி, ... முதலிய அனைத்தையும் குருவுக்குக் காணிக்கையாக்குகிறேன். அனைத்தும் அவருக்கே சொந்தம்; இதனை மறுக்கவோ, வெறுக்கவோ, எதிர்க்கவோ, மறக்கவோ, துறக்கவோ, ... மாட்டேன்! மாட்டேன்! மாட்டேன்! இது முக்காலமும் சத்தியம்!, ...

“நான், என்றென்றுமே குருவை, குருவாணையை, குருவின் வாரிசுகளை, குருவின் பதிலிகளை, குருவாணை பெற்றவர்களை என் உயிரினும் மேலாக மதித்து ஏற்றுப் போற்றி அடிபணிந்து செயல்படுவேன். இப்பிறப்பில் மட்டுமின்றி இனி எப்பிறப்பிலும் குரு துரோகியாகவோ, விரோதியாகவோ, எதிரியாகவோ செயல்படவே மாட்டேன். எனக்கு இப்பிறப்பிலேயே அனைத்து நிலைகளும் வேண்டும்.

இனிமேல் குருதேவர் பிறப்பெடுக்கும் போது மட்டுமே எனக்குப் பிறப்பு வேண்டும். எக்காரணம் பற்றியும் நான் குருவைப் பழித்துரைக்கவோ, இழித்துரைக்கவோ, எதிர்த்துச் செயல்படவோ மாட்டேன். அத்துடன் நானறியப் பிறர் என் குருவைப் பழிக்கவோ, இழிக்கவோ, எதிர்க்கவோ அனுமதிக்க மாட்டேன்.

"நான் என்னுடைய சுய உணர்வோடும் விருப்போடும் 'குருவே எல்லாம்', 'குருவே துணை', 'குருவே அனைத்துக்கும் கரு', 'குருவே தரு', 'குருவும் திருவும் ஒன்று', 'குருவே நாஞகிட வேண்டுகிறேன்', 'குரு வேறு நான் வேறு என்று எண்ணவே மாட்டேன்', 'குருவே வழி', 'குருவே வழித்துணை', 'குருவே வழிப்பயன்', 'குரு வாழ்க என்பதே அனைத்தும் தரும்', 'குரு சொல்வதை, செய்வதை, தருவதை மறையாகப் போற்றுவேன்', 'குருவழியாகப் பெறும் எதையும் பொறுப்போடும் பொறுமையோடும் புரிந்து செயல்படுவேன்', 'குருவால் இட்டும் தொட்டும் சுட்டியும் விளக்கப் படுவதைப் பற்றி உயிர் போனாலும் வெளியில் சொல்ல மாட்டேன்', 'குருவின் விசுவரூபம், அருவம், உருவம், அருவுருவம் யாரையும் தொடலாம்; ஆனால் யாரும் அத் தோற்றங்களைத் தொடக் கூடாது என்ற குருவாணையை மீறவே மாட்டேன்', 'குருவுக்காக எதையும் செய்வேன்', 'நான் என்றென்றும் குருவுக்கு உரியவனாகவே வாழ்ந்திடக் குருதான் அருள்புரிய வேண்டும்', ..."

என்றிப்படி எண்ணற்ற குருபாரம்பரிய மரபு வழி உறுதிமொழி வாசகங்கள் உள்ளன#. [#விரிவஞ்சி அனைத்தும் குறிக்கப் படவில்லை].

**இவற்றைக் கூறி உறுதியெடுத்துத்தான் சித்தரடியான், சித்தரடியாள்,**

**சித்தரடியார் ... என்ற அருளுலக அறிமுகநிலையும், பாதுகாப்பு நிலையும், அருளாட்சி ஆணைநிலையும் பெற்றிடுகின்றனர்.**

எனவே, யாருக்குத் தாங்கள் கூறிய உறுதிமொழிப்படி செயல்படக் கலக்கமோ, மயக்கமோ, தயக்கமோ, குழப்பமோ, ஐயமோ, அச்சமோ, கூச்சமோ, ... ஏற்பட்டாலும் சரி; அவர்கள் வெளிப்படையாக, நேரடியாகக் குருவிடம் கூறி அருட்பட்டங்களையும், அடியான் அடியாள் அடியார் பட்டங்களையும் துறந்துவிட்டு; அருளுலகப் பாதுகாப்புக்களையும், அறிமுகங்களையும், ... திருப்பிக் கொடுத்துவிட்டு சாதாரண இந்துமதப் பத்தர் என்ற நிலையையும் கடந்து; பத்தியார் என்ற உயர்ந்த நிலையில் நின்று சித்தர்நெறி ஆர்வலராக, ஆதரவாளராக, ஏந்தாளராக, விருப்பாளராக, பற்றாளராக, ஈடுபாட்டாளராக இருந்திடலாம்! இருந்திடலாம்! இருந்திடலாம்!

அதாவது, யார் வேண்டுமானாலும் சித்தர்நெறிக்குள் முறைப்படி குருவின் வழியாக நுழைவுற்றுக் குருபாரம்பரிய மரபுவழி உறுதிமொழிகளை ஏற்றுச் செயல்படலாம்; இதேபோல், குருவழியாகவே சித்தர்நெறி மரபுவழிச் சட்டதிட்டக் கட்டுப்பாடுகளை விட்டும் வெளிச் செல்லலாம். ஆனால், குருதுரோகியாகவோ, விரோதியாகவோ செயல்படக் கூடாது. மீறிச் செயல்படுபவர் அருளுலகத்தாரின் ஆட்சிப்படி நடத்தப்படுவர்.

5) இனிய நண்பா! காரைக்குடிப் பெரியவாள் மு.இராமானுசதாசு அவர்கள் தேதி குறிப்பிடாமல் எழுதியுள்ள அஞ்சல் ஒன்று; திரு J.P.படேல் என்பவரின் பிறப்பியல், கைரேகைகளுடன் இன்று 21-12-84இல் வந்தது. எனவேதான், பல்வேறு அலுவல்களுக்கிடையில் 17-12-84இல் தங்களின் துணைவியாரின் பொன்னேரி அஞ்சலுக்கு உடனே பதில் எழுதியது போல் விரிவான, விளக்கமான முழுக் கருத்து விளக்கப் பதில் மடல், **'ஐய விளக்க மடல்'** என்று தலைப்பிட்டு எழுதியுள்ளோம். இதனைப் பொறுமையாகவும்,

பொறுப்பாகவும் பலமுறை படித்திடுக! அ.வி.தி. தலைமைச் செயலாளர் பரமாச்சாரியார், திருமந்திற ஓலைநாயகம் அவர்களிடம் படித்துக் காட்டி விளக்கமும் பெற்றிடுக. மேலும் ஐயமிருப்பின் எழுதிடுக. ஆனால், எமது பொன்னான நேரத்தை வீணாக்கிட வேண்டாம்! வேண்டாம்! வேண்டாம்!

யாம் அனைத்தையும் எழுதியும், கூடுமானவரை சித்தர்நெறியைச் செயலாக்கக் கூடிய அருளாளர்களை உருவாக்கியுமே செயல்படுகிறோம். எமது முன்னோர்கள் கூறியபடியேதான் செயல்பட வேண்டிய நிலையிலுள்ளோம் யாம். எனவே, அன்புகூர்ந்து எமக்கு உலகியல்படி செயல்பட உதவுங்கள். இயலாவிடில், பேரன்பு கூர்ந்து நமது தாய்மொழி, இனம், நாடு முதலியவற்றின் மீட்சி கருதியும், மத மறுமலர்ச்சி வேண்டியும் ... எட்ட இருந்து எமக்கு ஆதரவு தாருங்கள், பாதுகாப்புத் தாருங்கள்.

6) எமது இயக்கமும், இயக்கம் சார்ந்த அமைப்புக்களும் யாரையும் கட்டுப்படுத்தவோ, வற்புறுத்தவோ, ஏமாற்றவோ, ஒருதலைச் சார்பாக நடத்தவோ... முயலாது! முயலாது! முயலாது! முயலவே முயலாது! அறிவு விழித்த நிலையில் செயல்படுங்கள்; செயல்படுத்துங்கள். இந்த அஞ்சலையே குருவாணையாக, திருமந்திற ஓலைநாயகத்துக்கு அனுப்பி விருப்பமில்லாதவர்கள் சித்தரடியான், சித்தரடியாள், சித்தரடியார், ... என்ற பட்டத்தைத் துறந்துவிட்டுப் **பத்தியார்** என்ற பட்டத்துடன் ‘சித்தர்நெறிக்கு’ உதவும் ஆதரவாளர்களாகச் செயல்பட அருளாட்சித் தாக்கீது வழங்க ஒப்புதலும், குருவாணையும் வழங்குகிறோம்.

‘**யாரையும் புண்படுத்திச் செயல்படுத்தி அருட்புரட்சி செய்யவே முடியாது**’ என்ற குருபாரம்பரிய வாசகப்படி, எம்மால் மனம் புண்பட்டவர்களிடம் மன நிறைவோடு மன்னிப்புக் கேட்கிறோம்! மன்னித்திடுக! நீங்கள் தவறு என்று கருதுபவைகளை மறந்திடுக!

எமது அருள் வழங்கிய திருக்கரங்கள் குவிந்து கும்பிடுகின்றன; ஏற்றிடுக!

7) "கடைவிரித்தோம்; கொள்வாரில்லை" என்று சொல்லிப் போகும் ஞானசித்தரல்ல யாம். பதினெட்டுக் கோடி அக்குரோணி சேனையின் பச்சைக் குருதியில் நீராடிப் பாரதப் போர் முடித்த கருவூரார் வழிவந்த சித்தர் கண்ணன் பாரம்பரியத்தில் வந்தவன் நான். எனவே, பிற்கால அருட்பேரரசு அமைத்த சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் வழியில் செயல்பட அருட்படை திரட்டுகிறவனே நான். என்னைத் தவறாக, **இட்டும் தொட்டும் சுட்டியும் அருள்வழங்கும் முறையைப் பொழுதுபோக்காக்கிச் செயல்படும் போகி, மோகி, ... என்று கருதவே வேண்டாம். யாம், 'எரிமலைக் குழம்பு வீரிட்டு ஓடும் நெருப்பாறுதான்'** என்பதை உணர்க! உணர்த்துக! உடன் உளம் திறந்த பதிலனுப்புக!

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**

**21/12/84.**

**//உண்மை நகல்//**

**// இதன் மூல நகல்: சித்தரடியார் திரு சோ.இரவீந்திரன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது. //**

# அருட்பணி விரிவாக்கத் திட்டம்

உலக மத மாறுபாடுகளையும், வேறுபாடுகளையும், கூறுபாடுகளையும், போராட்டங்களையும் தவிர்த்து; **'உலக ஆன்ம நேய ஒருமைப்பாடு'** உருவாக்குவதற்காக அருளுலகப் பயிற்சிகள் [எட்டறிவும், பட்டறிவும்] வழங்கப் படுகின்றன. இம்மண்ணுலகுக்கு முன்பே விண்ணுலக மொழியாக இருந்திட்ட தமிழ்மொழியின் மூலம் **'சித்தர் நெறி'** வாயிலாகப் பத்தி நிலைகள்! சத்தி நிலைகள்! சித்தி நிலைகள்! முத்தி நிலைகள்! .... பெற்றிட வாரீர்! வாரீர்! வாரீர்!

**"தன்னை யறிந்தால் தலைவனை யறியலாம்"**
**"தலைவனை யறிந்தால் தன்னை யறியலாம்"**

**இந்து மறுமலர்ச்சி இயக்கம்.**
**தோற்றம்: கி.பி.1772.**

**தலைவர்:**

**குருமகா சன்னிதானம்.**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**

//1983இல் அச்சிடுவதற்காக எழுதப்பட்ட அறிவிக்கையின் நகல்.//

**“கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்.”**



“... **தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள்** ஏறத்தாழ இருநூற்று ஐம்பத்தாறு ஆண்டுகள் (256) வாழ்ந்திட்டார். இவர் வடஆரியர்களின் வேதமத மாயையிலிருந்தும், சமசுக்கிருத மொழியின் பிடியிலிருந்தும் அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்களையும் விடுவித்தால்தான் அருளாட்சி அமைக்க முடியும் என்று கண்டறிந்தார். இப் பேருண்மையினை விண்டுரைத்திட சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்களை உருவாக்கி காவல் தெய்வங்களைப் புத்துயிர்ப்புச் செய்யும் பணியைச் செய்திட்டார் ...”

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்** அவர்களின் குருவாணைப் படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப் படுகின்றன.



**அம்மையப்பர்**

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

**www.newsletters.gurudevar.org** **www.gurudevar.org**
**www.induism.org** ***Email:*** **indhuism@gmail.com**

www.books.gurudevar.org